பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : மாசி 9 (21—2—68) புதன் ★ வெளியூர் : மாசி 10 (22—2—68) வியாழன் [இதழ் : 208

பிரிட்டனில் நாணய மாற்றம்!

இந்தியாவைப் போலவே இங்கிலாந்திலும் நாணயப் புழக்கத்திற்காகத் தசாம்ச முறை பின்பற்றப்படவிருக்கிறது. இந்தப் புதிய முறை 1971-லிருந்து நடைமுறைக்கு வரும்.

இப்பொழுதுள்ள பென்னி நாணயங்களில உள்ள அரசியின் உருவமும், பிரிட்டிஷ் சிங்கமும், ஸ்காத்துலாந்துப் பயிரும் புதிய நாணயத்திலும் இடம் பெறும்.

மூன்று நூற்றுண்டுகளாக இந்த நாணயங்களை அலங்கரித்துவந்த பிரிட்டிஷ் பெண்மணியின் உருவம் நீக்கப்பட்டுவிடும்.

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

அன்புரை -- அறிவுரை -- அரசியல் விளக்கவுரை!

என்பது நிமிட நேரம் அனைவரது இதயங்களையும் கட்டியாண்டிருக்கிருர் அறிஞர் அண்ணு!

கவர்னர் பேருரையின்மீது ஏழு நாட்களாக நடைபெற்ற விவாதங்களுக்கு அவர் தந்திருக்கும் பதிலுரை, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் மேலும் ஒரு சிறப்பு அத்தியாயமாகும்.

'வரவு' என்றும், 'செலவு' என்றும், 'பஞ்சம்' என்றும், 'பற்ருக்குறை' என்றும் பழைமைப் போக்கில் மட்டுமே இருந்துவந்த கவர்னர் உரை—அதன் மீதான கருத்துரைகள்—இறுதியில் வரும் பதிலுரை—கழகம் ஆட்சிக்கு வந்தபின், இரண்டாவது முறையாக புதுமைகள் பலவற்றைச் சமைத்திருக்கின்றன!

"அண்ணுதுரை அவர்களால், 'முதலமைச்சர்' பதவிதான் சிறப்புப் பெறுகிறது; பதவியினுல் அவர் சிறப்புப் பெற வேண்டுமென்ற அவசியம் இல்லை" என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தனது தலையங்கத்தின் மூலம் தந்த கருத்து, 'வெறும் வார்த்தை அலங்காரமல்ல' என்பதனை அண்ணு அவர்களின் நேற்றைய சட்டமன்ற பதிலுரையைக் கேட்டவர்கள்—படித்தவர்கள் உணருவார்கள்!

"சட்டமன்றத்திலும் இதுபோல் பேசலாம்; கருத்துக்களை தெரிவிக்கலாம்; கொள்கைகளுக்காக வாதாடலாம்; விமர்சனங்களுக்குப் பதில் தரலாம்; குழப்பங்களுக்கு விளக்கம் அளிக்கலாம்" என்பதற்கு, அண்ணு அவர்களின் நேற்றைய பேச்சு நல்லதொரு எடுத்துக்காட்டாக இருக்கும்!

அண்ணு அவர்களின் உரை முழுவதனையும் துருவித் துருவி ஆராய்ந்தாலும், எந்த ஓர் இடத்திலும் அவர், தன்னை 'ஒரு முதலமைச்சர்' என்ற அதிகார உணர்வில் நினைவுபடுத்திக் கொண்டு பேசவில்லை என்பது புலனுகும்.

இது, அரசியல் பார்வையாளர்களின் கண்களுக்கு எளிதில் படும்; ஆனுல், காங்கிரசுக்காரர்களின் இதயத்தில்தான் படவேண்டும்!

"பொருள் நட்டத்தைவிட உயிர் நட்டத்தைத் தடுக்கவேண்டுமென்பதே என் சுபாவம்."

அவரது இந்த இதய வார்த்தைகள், நந்தா போன்ற மனிதர்களின் 'கற்பாறைபோல் மனம் கலங்காதவர்' என்ற பட்டயத்தை வாங்கித் தராது! ஆனுல், மொழித் துறையில் பாதிக்கப்படுவதால் கொதித்தெழும் மாணவர்களின் உயிரைத் துப்பாக்கி கொண்டு கொன்று குவிக்காது என்ற ஈர உணர்வினைக் காட்டுகிறதல்லவா?

'என்ன உடலுக்கு?' என்று கேட்க வந்த தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரிடம், 'எல்லாம் உங்களால் பாதி' என்று—சுப்பிரமணியத்தின் பயண நிகழ்ச்சிகளில் நேர்ந்த வன்முறைகள் தமது இதய அமைதியைப் பாதித்தவிதத்தினைக் கூறிவிட்டு, சாதிக் பாட்சாவின் வீட்டில் அமர்ந்துகொண்டு, அடுத்த கிராமத்துக்குப் போகப் போலீசுப் பாதுகாப்பு கேட்டதையும், அதற்கு, 'இல்லை' என்ற கைவிரிப்பு கிடைத்ததையும் சுட்டிக்காட்டி, அந்த நாளில் தனக்குக் காங்கிரசு நிர்வாகம் தந்த 'பாதுகாப்பு'ப் பற்றி அண்ணு அவர்கள் சட்டமன்றத்தில் விவரித்தபோது எந்தக் காங்கிரசு உறுப்பினரின் நெஞ்சம்தான் கசிந்து உருகாது!

அண்ணுவின் பின்னுல் பாதுகாப்பாக ஒரு போலீசுக்காரரைக்கூட அனுப்பாத அந்த நாள ஆளும் கட்சியின் தலைவருடன் இப்போது மாவட்டக் கலெக்டரும் போலீசு அதிகாரியும் உடன் செல்லுகின்றனர் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு, தமிழகத்தின் காங்கிரசுக்காரர்களுக்கு ஓரளவுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தும் என்ருலும், அதனைச் சுட்டிக்காட்டுவதில் தவறு என்ன இருக்க முடியும்?

"பொது மொழி தேவை என்று விவாதிக்கிறீர்கள்; 'யாருக்குப் பொது மொழி—எதற்காகப் பொது மொழி' என்று விளக்கப்பட வேண்டும்!"

என்ற அண்ணு அவர்களின் வினுவுக்கு, 'காங்கிரசுத் தரப்பில் உள்ள 49-பேர்களிடமிருந்து யாராவது ஒருவர் மூலமாவது இடையீடு வந்திருக்கிறதா' என்று பார்ப்பவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது!

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி மொத்தமாக நாட்டு ஒற்றுமை பேசும் 'அகில இந்தியவாதி'களுக்கும் அண்ணு அவர்கள் விளக்கம் தந்திருக்கிருர்—

"மூடி மறைத்தால்தான் ஒருமைப்பாடு கெடும்; எப்படிக் கூடிவாழ்வது என்று வெளிப்படையாகப் பேசுவோம்—வாருங்கள்; கூச்சப்படாமல் — பயப்படாமல், 'நாம் இருக்கும் இடம் ஒரு நாடுதான்' என்பதனை எண்ணிப்பாருங்கள்; பல்வேறு மாநிலங்கள் சேர்ந்து அமைக்கப்பட்டிருப்பதுதான் ஐக்கிய அமெரிக்க நாடுகள்"

என்ற அண்ணுவின் கருத்துரை, 'இந்திய ஒற்றுமை ஏன்—எப்படி' என்ற அடிப்படைக்கு விளக்கம் அளிப்பதாக இருக்கிறது' என்ற உண்மையை, எதிர்காலம் உணர்த்த இருக்கிறது!

"'இந்தியா ஒன்று' என்று கூறி, பேதமையைக் காட்டிக் கொள்ளாதீர்; 'ஒன்ருக இருக்கப் பாடுபடுவோம்' என்று கூறுங்கள்; முன்நிற்பவர்களில் முதலாவதாக நான் இருக்கிறேன்"

என்ற கருத்தில், முதல் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து அண்ணு அவர்கள் தந்த அறிவுரைக்கு, நேற்றைய தினம் சொல்லியிருக்கு: கருத்துக்கள் வலிவு சேர்க்கின்றன!

கவர்னர் உரையில், 'கழக வாடைதான் வீசுகிறது' என்று கடைசியாக நேற்று எதிர்க் கட்சித் தலைவரும் சொல்லியிருக்கிருர்.

ஆனுல், கவர்னர் பேருரையை அடுத்து, ஆந்திர—கேரள முதலமைச்சர்கள், 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்' எனப் பேசியிருக்கிருர்களே—அவர்களெல்லாம் தி. மு. க.-வினர் அல்லர் என்பதனை, காங்கிரசுக்காரர்கள், அரசியல் உறக்கத்திலிருந்தும் விழித்துக்கொண்டு உணர்ந்து பார்க்க வேண்டும்!



"இன்றைய அரசியல் அமைப்பில், மாநில—மத்திய அதிகார முறைகள், குடத்துக்குள் பாம்பை வைத்துவிட்டு அதில் குடியிருப்பதற்கும் மனிதர்களை விடுவது போல் இருக்கிறது"

என்ற அண்ணு அவர்களின் உவமை நயம், புதுடில்லிவாதிகளின் உள்ளங்களைத் திறந்துகாட்டுவதாக இருக்கிறது!

சட்டம்—அமைதி—சனநாயகம் என்ற பெரிய வார்த்தைகளின்கீழ் புகலடைந்திருக்கும் தமிழகக் காங்கிரசுக்காரர்களுக்கு அண்ணு அவர்கள்,

கௌகத்தி கலவரம்—
ராஞ்சி வன்முறை—
புதுடில்லி அவலகங்கள்—

ஆகிய அனைத்தையும் எடுத்துக்காட்டி, 'அதற்கெல்லாம் பெயர் என்ன' என்று கேட்டு, 'அது போன்ற நிலையா தமிழகத்தில் இருக்கிறது?' என்று வினவியிருப்பது, பிப்ரவரி 25-ஐ நோக்கிப் பேசும் அவர்களுக்கு இரண்டாம் சிந்தனையைத் தருமென எதிர்பார்ப்போமாக!

'கழக ஆட்சியைக் கவிழ்க்க முடியும்' என்று கனவு காண்பவர்களுக்கு, அப்படியே கவிழ்த்தாலும், மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாத நிலை காங்கிரசுக்கு இருப்பதனைச் சுட்டிக்காட்டி, 'எனவே, கவிழ்ப்பு முயற்சி, கழகத்துக்கு அல்ல—சனநாயகத்துக்கும், மக்களுக்கும்தான் தீங்கு பயக்கும்' என்று அண்ணு அவர்கள் எடுத்துக்காட்டியிருப்

(4-ம் பக்கம் பார்க்க)

மாநிலங்கள்மீது டில்லி ஆதிக்கம்!

மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் பேராபத்து

டாக்டர் ஏ. இராமசாமி எச்சரிக்கை

கோட்டயம், பிப். 20—

மாநிலங்கள்மீது மத்திய அரசு அளவு கடந்து ஆதிக்கம் செய்வதை வன்மையாகக் கண்டித்தார்—டாக்டர் ஏ. இராமசாமி.

இங்கு, கடந்த திங்களன்று நடந்த ஆங்கில மொழி மாநாட்டில் பேசிய அவர், 'மாநில ஆட்சி உரிமையையே கடுமையாக அச்சுறுத்தும் வகையில், மாநில மக்கள்மீது மத்திய அரசின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது' என்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மத்திய அரசின் ஆதிக்கம் குறைக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறியதாவது:—

"இன்று மத்திய அரசுக்கு உள்ள வருவாய் வழிகளெல்லாம் உண்மையில் மாநிலங்களுக்கு உரியவையேயாகும்; எனவே, எல்லா மாநிலங்களுக்கும் நியாயமான முறையில் நிதி யொதுக்குவதற்கான புதிய கொள்கையை உருவாக்க வேண்டும்.

மாநிலங்களில் உள்ள மத்திய அரசு அலுவலர்களைக் குறைக்க வேண்டும்.

மாநில மக்களின் நல்வாழ்வுக்கான மாநில அரசின் பணிகளையும், பிற பணிகளையும் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

எங்கே செய்யவேண்டிய பணிகள் மிகுந்துள்ளனவோ அவற்றை — அவை எத்தகைய பணிகளாக இருப்பினும்—விரைந்து செய்து முடிக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

பல்வேறு துறைகளிலும் உத்தியோக நியமனங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

மாநில அரசுத் துறைகள்மீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசு ஆவல்கொண்டு செயல்பட்டுவருவதுடன், அனைத்திந்தியக் கல்வித் துறை, அனைத்திந்திய மருத்துவத் துறை, அனைத்திந்திய வேளாண்மைத் துறை—என்று இப்படி எல்லாத் துறைகளையும் அனைத்திந்திய மயமாக்கும் யோசனைகள் வேறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய பொதுப் பணித் துறை போன்ற அனைத்திந்தியத் துறைகளை மத்திய அரசு ஏற்படுத்தினுலும் அவற்றிற்கு உண்மையில் மாநில மக்களின் பணமே செலவிடப்படும்.

மாநில அரசுகள் தமக்குள்ள அதிகாரங்களையும், கடமைகளையும் கொண்டு இயங்குவதும் அதே நேரத்தில் மத்திய அரசு மாநில அரசின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதுமாகத் தற்போது உள்ள ஆட்சி முறை, ஒரு சனநாயகக் கூட்டாட்சி முறையாகாது!

மாநிலங்கள் இப்போது விழித்தெழாதிருந்துவிட்டால் பிறகு, ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசின் தயவை எதிர்பார்த்துக் கொண்டே இருக்க நேர்ந்துவிடும்!"

ஆந்திர மாநிலத்தின் மொழிக் கொள்கை

டில்லி தலைவர்களிடம் அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, பிப். 20—

மும்மொழித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்றும், குறிப்பாக மத்திய அரசு ஊழியர் தேர்வினை எல்லா வட்டார மொழிகளிலும் நடத்த வேண்டும் என்றும், இப்படிச் செய்வதன் மூலம் இந்தி பேசாத மக்களின் சுமை எல்லோருக்கும் நிரவலாக்கப்படும் என்றும் ஆந்திர மாநில அரசு, மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளது.

இந்த யோசனையை, தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடமும், மற்ற தலைவர்களிடமும், மாநில வருவாய்த் துறையமைச்சர் வி. பி. இராசு எடுத்துரைத்தார்.

இந்திரா அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை

மக்களவையில் தீர்மானம்

புதுடில்லி, பிப். 20—

இந்திரா காந்தி அமைச்சரவை மீது மக்களவையில், சனசங்கத்தைச் சேர்ந்த திரு. பால்ராஜ் மதோக் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்.

கட்ச் விவகாரம் தவருகக் கையாளப்பட்டது தொடர்பான தீர்மானம் இது என்று அவைத் தலைவர் சஞ்சீவியார் அறிவித்தார்.

இத்தீர்மானத்தைக் கொண்டுவர 50 உறுப்பினர்கள் ஆதரவளித்ததால், அவைத் தலைவர் இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கினுர்.

இதை விவாதிப்பதற்கான காலை பின்னர் அறிவிப்பதாக அவைத் தலைவர் கூறினுர்.

நம்நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மாசி 9 (21—2—68) புதன்

பூனச்சா ஏற்றிய சுமை!

இரயில்வே வரவு-செலவுத் திட்டம் தரப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தில், பலவிதமான இரயில்வேக் கட்டணங்களும் கூடுதலாக்கப்பட்டிருக்கின்றன.

வருமானம் கூடுதலாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டதாகவும், அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கப்பெருததுடன், பெரும் அளவுக்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த இழப்பை ஈடு செய்வதற்கே பல இனங்களிலும் இருந்துவரக்கூடிய கட்டணங்களை மேலும் உயர்த்தியிருப்பதாக இரயில்வே அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

அதாவது, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தைவிட ரூ. 17.45 கோடி குறைவாகத்தான் கிடைத்திருக்கிறது. இத்துடன், வேறு சில செலவுகளும் பெருகிவிட்டன. இவ்விரண்டினாலும் மொத்தத்தில் ரூ. 22.50 கோடி பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பற்றுக்குறையை நிறைவு செய்ய பிளாட்பாரம் டிக்கெட் கட்டணத்திலிருந்து பண்டங்களை ஏற்றிச் செல்லுவதற்காக வசூலிக்கப்பட்டுவரும் கட்டணங்கள்வரை--அனைத்துக் கட்டணங்களும் உயர்த்தப்பட்டிருக்கின்றன. கூடுதலாக இருந்திட்டாலும் குறைவானதாக இருந்திட்டாலும், இந்தக் கட்டண உயர்வின் பெரும் பகுதி, நடுத்தர மக்களின் முதுகைத்தான் முறிக்கும்!

பிளாட்பாரத்திற்குள் நுழைவதற்கும் பதினைந்து காசு கட்டணமாக இருந்துவருகிறது; இக்கட்டணம், இருபது காசுகளாக உயர்த்தப்படுகிறது.

பார்சல் கட்டணம் பத்துச் சதவிகிதமும், கூட்ஸ் மூலம் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கு மூன்று சதவிகிதமும் மேல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

நடைமுறை ஆண்டில் பண்டங்கள் போக்குவரத்து, முன்னைய ஆண்டைவிட 85 இலட்சம் டன் கூடுதலாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது; ஆனால், இது பொய்த்துப் போய்விட்டது. முன்னைய ஆண்டில் நடைபெற்ற பண்டங்கள் போக்குவரத்தைவிட, 10 இலட்சம் டன் குறைந்துபோய்விட்டது.

இப்படிப் பண்டங்கள் போக்குவரத்து கணிசமாகக் குறைந்துவிட்டபோதிலும், 'அடுத்த ஆண்டில் இக்குறைவு மறைந்து, பண்டங்கள் போக்குவரத்தின் அளவு மேலும் பெருகக்கூடும்' என, இரயில்வே அமைச்சர் மதிப்பிட்டிருக்கின்றார். இவ்வினத்தில் அவர் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, வெறும் ஆசையாகப் போய்விடக்கூடாது.

இரயில் மூலம் பயணம் செய்கின்ற மக்கட் தொகை, பயணக் கட்டணத்தை ஒவ்வோராண்டும் உயர்த்திக்கொண்டே போவதன் விளைவாக நாளுக்கு நாள் குறையத்தான் செய்யும். இரயிலில் பயணம் செய்யும் மக்கள் இப்பொழுது தருகின்ற கட்டணமே கூட கூடுதலானதுதான்; மேலும் அக்கட்டணத்தை உயர்த்தியிருப்பதனால்; இரயிலில் பயணம் செய்கின்றவர்கள் தொகை மேலும் குறைவதுடன், மக்கள் பயணம் செய்வதன் வாயிலாகக் கிடைத்து வருகின்ற வருமானமும் குறையத்தான் செய்யும்.

இரயிலில் பயணம் செய்கின்றவர்களுக்கு, குறைந்தபட்சம் உட்கார்ந்து செல்வதற்கான வசதியாவது இருந்தாக வேண்டும்; குறிப்பிட்ட காலத்தில் பயணத்தை முடிப்பதாகவும் இருந்தாக வேண்டும்; ஆனால் இந்த இரண்டும், இன்று இரயில் பயணத்தில் அறவே இடம் பெற்றிருக்கவில்லை. 'இரயில் பயணத்தில் உயிருக்குப் பாதுகாப்பு இருப்பதில்லை' என்பதைக் குறிப்பிடவே தேவையில்லை!

குடும்பம் குடும்பமாகப் பலர் ஒன்றுகூடி இரயில் மூலம் பல ஊர்களுக்குச் சென்று திரும்புவது என்பது, இப்பொழுது சிறுகச் சிறுகக் குறைந்துகொண்டு வருகிறது. இவ்வகைப் பயணம் இப்பொழுது பஸ்கள் மூலம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காலப் போக்கில், இந்தப் பஸ் பயணம் மேலும் பெருக்க்கூடும்; இதை, இரயில் கட்டண உயர்வு மேலும் ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இரயில் பயணத்தை பஸ்கள் ஏற்றுக்கொண்டு வருவதைப் போன்றே, கூட்ஸ் மூலமும் பார்சல் மூலமும் நடைபெற்றுவந்த பண்டங்களின் போக்குவரத்தை லாரிகள் ஏற்றுக்கொண்டு வருகின்றன. கூட்ஸ் மூலம் அனுப்புவதைவிட லாரிகள் மூலம் பண்டங்களை அனுப்புவதில், பண்டங்கள் களவு போவது கிடையாது; தவறான விநியோகத்துக்கு இடமிருப்பதில்லை; போக்குவரத்துக்குரிய கால அளவும் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே உள்ளது. லாரிகள் மூலமாகப் பண்டங்களை அனுப்புவது, நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது.

லாரிகள் மூலம் பண்டங்களை அனுப்புவது குறுகிய தொலைவுக்குள் அடங்கிய ஊர்களுக்கு இடையில் மட்டுந்தான் நடைபெறுகிறது என்பதில்லை; பல மாநிலங்களுக்கிடையிலும் லாரிகள் மூலம் பண்டங்கள் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; இது மென்மேலும் அளவில் பெருகும் என எதிர்பார்க்கலாம்.

பலவகையான பயணிகள் கட்டணங்களை உயர்த்தியுள்ளதும், பண்டங்கள் போக்குவரத்துக்கான கட்டணத்தை உயர்த்தியிருப்பதும், இறுதியாக இரயில்வேயின் வருமானத்தைக் குறைக்கத்தான் செய்யும. பலவகைப் பண்டங்களின் விலையும், இன்றுள்ளதைவிடக் கூடுதலாகத்தான் ஆகும்; இதன் பலனாக, நடுத்தர மக்களும் ஏழை மக்களும் விலையேற்றத்தின் காரணமாக ஏற்றுக்கொண்டுள்ள சுமை, மேலும் கூடும்.

இரயில்வே அமைச்சர் பூனச்சா, நடுத்தர மக்களின் முதுகை மேலும் வளையச்செய்யும் சுமையைத்தான், தமது இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு மகிழ்ச்சிப் பெருக்குடன் வழங்கியுள்ளார்.

—கா. க.

நாஜிகளை நினைவுப்படுத்தும் பிப்.25-தமிழகத்தில்!

"தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்தில் எனக்குக் கல்மாரி பொழிந்தது; ஒரு கல்கூட என்மீது படவில்லை!"

—சி. சுப்பிரமணியம்
(18—2—68-ல் மயிலைக் கூட்டத்தில்)

ஆனாலும், ஏன் ஆர்ப்பாட்ட அரசியல் நடத்துவதற்குக் காங்கிரசுக்காரர்கள் துடிக்க வேண்டும்? கல்மாரியில் சிக்கிய சுப்பிரமணியத்தின் மீது ஒரு கல்கூட விழவில்லை என்றால், ஒன்று—அது, 'மாரி'யாக இருந்திருக்காது; அல்லது, 'காரியமாக'வே அந்த 'மாரி'யை ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

சட்டம்—அமைதியைக் குறித்து இந்த மாநிலத்தில் தூற்றித் திரிவதற்குக் காங்கிரசார் கையாளும் தந்திரங்களை அறிந்தவர்கள், 'கல் மாரி'யைத் தங்களது 'சொல் மாரி'க்குத் தோதாகக் காங்கிரசுக்காரர்களே பொழியுமாறு செய்தார்கள் என்பதை நம்பத் தொடங்கியிருக்கின்றனர்!

'கல் மாரி' பொழிந்த பிரதேசங்கள் இன்றளவும் காங்கிரசின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறப்பதாக அவர்களே ஒப்புக்கொள்ளும் இடங்களாகும்.

சென்னையில் சிறப்புற நடைபெறும் காங்கிரசுக் கூட்டங்கள், கோவையிலும், மதுரையிலும் குழப்பத்தில் சிக்கக் காரணம் என்ன? சுப்பிரமணியத்தின் மீது ஒரு கல்கூடப் படவில்லை; ஆனால், போலீசுக்காரர்களும், அதிகாரிகளும், கலெக்டரும் அடிபட்டிருக்கிறார்கள்! வைக்கப்பட்ட 'குறி' யாருக்கு என்பது புரியவே செய்கிறது!

'கல்லெறிச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் காங்கிரசுக் காலிகளே' என்பது, 'சட்டம் -- அமைதி' பேசுவோருக்கு அல்ல—மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துப் பேசுபவர்கள் அனைவருக்கும் விளங்கும் உண்மையாகும்.

கல்லால் அடிபட்டதாகக் கதைக்கும் காங்கிரசுக்காரர்களையும், உண்மையாகவே அடிபட்டு அதற்கான சிகிச்சைபெற்ற போலீசுக்காரர்கள்—அதிகாரிகளின் எண்ணிக்கையையும் பார்த்தாலே இந்த உண்மை புரியும்.

காலித்தனங்களுக்கு மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டு, கடந்த நாட்களில் 'தர்பார்' புரிந்தவர்கள் காங்கிரசுக்காரர்கள்தாம்!

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் கொடுமைக்குள்ளான மக்களைக் காட்டிலும் காங்கிரசுக் காலித்தனத்தால் கொலையுண்டவர்களின் எண்ணிக்கை அதிகம்! பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட எதிர்க் கட்சிகளைச் சார்ந்த தோழர்களின் பிணத்தைக்கூடச் சிறுமைப்படுத்தாமல், காங்கிரசுக் காலிகள் கண்ணியம் காட்டியதில்லை!

இதே கோவைப் பகுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, அவரைக் கொலை செய்ய முயற்சி செய்த காங்கிரசுக் காலிகளைக் கண்டித்து எந்தத் 'தலைமகனும்' வாய் திறக்கவில்லை!

தேனியிலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைக் கல்லால் அடித்து அல்ல—நசுக்கிக் கொலை செய்ய முயன்றவர்கள் காங்கிரசுக் காலிகள்தான் என்பது ஊர் அறிந்த உண்மை!

சென்னை கோட்டூர்ப் பகுதியில் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது ஆடைகளையும் இழந்து ஓட ஓடத் துரத்தியடித்த காங்கிரசுக் காலிகளின் பெயர்ப் பட்டியலைக் கொடுத்தபின்பும், அதுபற்றிக் கண்டித்து வாய் திறந்த காங்கிரசுக் கனவான்கள் யார் என்பதை யாராவது சொல்லமுடியுமா?

1965 சனவரி 26-ல் தொடங்கி ஒரு மாத காலமாகக் காங்கிரசுக் காலிகள் நடத்திய கொள்ளையும், ஆடிய கொலை வெறித் தாண்டவமும்—நினைத்தாலே நெஞ்சு நடுங்கக்கூடியவை! கழகத் தோழர் என்றாலே, அப்போது, ஐந்தாந்தர—ஆறாந்தர மனிதர்களாக நடத்தப்பட்டார்கள்!

கழகத் தலைவர்களின் வீடுகள்—கழகக் கட்டடங்களான 'அறிவகம்'—'அன்பகம்' ஆகியவைகள் பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டன; போலீசு அதிகாரிகளிடம் முறையிட்டபோது, 'நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது; காங்கிரசுக்காரர்கள் ஏது செய்தாலும் அதில் நாங்கள் தலையிடக்கூடாது என்பது எங்களுக்கு இடப்பட்டுள்ள கடுமையான உத்தரவு; தேவையானால், முதலமைச்சருக்கு போன் செய்து கேட்டுக்கொள்ளுங்கள்' என்றே கட்டுப்பாடாகச் சொன்னார்கள்.

"சன. 26-ம் தேதி 'அறிவகத்'தைத் தரைமட்டமாக்குவோம்" என்று கொக்கரித்த காங்கிரசுக் காலிகளின் பேச்சைக் குறிப்பிட்டுக் காட்டி, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே தம் கைப்படப் போலீசுத் துறை உயர் அதிகாரிக்கும்—உரிய அதிகாரிகளுக்கும் 10 நாட்களுக்குமுன்பே எழுத்துமூலம் அறிவித்துப் பாதுகாப்புக் கேட்டிருந்தும் அந்த சன. 26-ந் தேதி காங்கிரசுக் காலிகளின் கொலைவெறித் தாண்டவத்தை, போலீசார் பார்த்துக்கொண்டிருந்ததைத் தவிர எதையும் செய்யவில்லை!

அன்று நாவலர்' 'பிரதான எதிர்க் கட்சித் தலைவர்' ஆகத்தான் இருந்தார். அது மட்டுமல்ல; 'அறிவகத்'தைத் தாக்கிக் கதவுகளை உடைத்து கலாம் விளைவித்தவர்களைப்பற்றி மறுநாள் புகார் எழுதிக்கொடுத்த 'அறிவகத்'துத் தோழர்களையே கைது செய்யப் போலீசார், நள்ளிரவில் ஆர்ப்பாட்டமாக—அதிகாரத் தோரணையில் படையெடுத்து வந்தனர். அந்தத் தோழர்கள் இல்லாமற்போனதால், கட்டடத்தைக் காவல்புரியும் இரவுக் காவல்காரரின் சின்னஞ்சிறு மகனையும், இயந்திரத்தில் இதழ் அச்சிட்டுக் கொண்டிருந்த ஊழியரையும் கைது செய்து சிறையிலடைத்து, பக்தவத்சலம் ஆட்சி 'சட்டம்—ஒழுங்கை'ச் சாதித்தது!

இவையெல்லாம் பழங் கதைகள் என்றாலும், 'சைத்தான்கள் வேதம் படிக்கப் புறப்பட்டுள்ள' இந்த நேரத்தில், நமது நினைவுத் திரையில் இவை அனைத்தும் நிழலாடுகின்றன!

இருபதாண்டுக் காலம் மூக்கு முட்டப் பதவி ருசியை அனுபவித்துவிட்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டுக் காலம் ஆவதற்குமுன்பே சனநாயகம் பேசுவதற்குக் கிளம்பியுள்ள பச்சைச் சர்வாதிகாரக் கட்சியினர் போடும் பகல் வேடம், சரித்திரச் சம்பவங்களை நினைவுகூர்வதை நம்மால் தடுக்க முடியவில்லை!

அரியானாவில்—வங்காளத்தில்—பீகாரில் — உத்தரப் பிரதேசத்தில்—இராஜஸ்தானத்தில் சனநாயகத்தைப் புதைகுழிக்கு அனுப்பிய அரசியல் கொலைகாரர்கள், தமிழகத்தில், 'சனநாயகப் பாதுகாப்பு நாள்' கொண்டாடுவதாக நினைப்பதற்கே வெட்கப்பட்டிருக்கவேண்டும்! அந்த உணர்வு அவர்களைவிட்டு வெகு நாட்களுக்கு முன்பே நீங்கிவிட்டதால், வெளிப்படையாகவே சொல்லத் தெருவுக்கு வரத் துணிந்துவிட்டார்கள்!

> **"ஜெர்மானியர்கள் தங்கள் அரசியலில் வைக்கும் பற்றுதலைப்பற்றி என்னிடம் ஒன்றும் பேசவேண்டாம்; நான் 57 நாட்கள் தான் பதவி வகித்தேன்; அந்த 57 நாட்களில் 57 முறை வஞ்சிக்கப்பட்டேன்; துரோகத்தைத் தாங்கிக்கொண்டேன்"**

என்று நாஜிகளின் கையில் ஜெர்மனி சிக்குவதற்குமுன், கடைசியாக சனநாயக அரசின் தலைமைப் பதவியை வகித்த ஷ்லிச்சர் என்பவர், நாஜிகளின் அட்டகாசத்தையும், காலித்தனங்களையும் குறிப்பிட்டுப் பிரான்சு நாட்டுத் தூதுவர் ஒருவருடன் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

அதேபோல, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில், காங்கிரசுக்காரர்களால் 1000 முறை வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்—துரோகத்தனத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்!

படி அரிசி முதற்கொண்டு பருப்பு விளைவிப்பது வரையில், நெடுகிலும் காங்கிரசுக்காரர்களின் துரோகச் சிந்தனை நஞ்சாகக் கப்பிவருகிறது!

மொழிப் பிரச்சினையில் ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் ஓராயிரம் மீர்ஜாபர்களுக்குச் சமமாக—கோடி குவிஸ்லிங்குகளுக்கு இணையாக—இருக்கிறார்கள்!

இந்த நிலையில்தான் அவர்கள், 'சொத்துக்கும் உயிருக்கும் பாதுகாப்பில்லாது போய்விட்டதாக' ஒப்பாரி வைக்கிறார்கள்!

எந்தக் காங்கிரசுக்காரர், 20 ஆண்டுக் காலமாகத் தீயவழியில் சேர்த்த தம் சொத்துக்களை இழந்தார்?

எத்தனைக் காங்கிரசுக்காரர்களின் உயிர் போக அரசு நிர்வாகம் வாளாவிருந்தது?

உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்—விவரம் கூறிட முன்வருவார்களா?

ஆனால், காங்கிரசு ஆட்சியில் பாதிக்கப்பட்ட—சொத்திழந்த—உயிரிழந்த தோழர்களின் பட்டியலைக் கழகம் வெளியிடத் தயாராக இருக்கிறது!

ஆகவே, காங்கிரசு, அரசியல் நடத்தவில்லை! அது அந்த நாள் ஆதிக்கவாதிகள் ஆடித்தோற்ற நாடகத்தை நடித்துக் காட்டப் புறப்பட்டிருக்கிறது!

கேரளத்தின் நம்பூதிரிபாடு அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்கு அங்கு எடுத்துக்கொண்ட ஆரம்ப நடவடிக்கைகளை, இன்று இங்கும் காங்கிரசார் ஒத்திகை பார்க்கக் கிளம்பியிருக்கிறார்கள்!

ஆனால், இது 1958-59 அல்ல! அதேபோல், காங்கிரசுக் காலிகளின் தந்திர அரசியல், தமிழகத்தில் புதிதுமல்ல—புரியாததுமல்ல!

ஜெர்மானியப் பாராளுமன்றக் கட்டடத்திற்குத் தாங்களே தீ மூட்டிவிட்டு, கம்யூனிஸ்டுகளின் பேரில் பழிபோட்ட நாஜிகளின் அரசியல் தந்திரம், நமக்குப் பழங்கதையாகப் போய்விட்டிருக்கலாம்; ஆனால், தாங்கள் வேய்ந்த கொட்டகைகளுக்குத் தாங்களே தீயிட்டுவிட்டு — கழகத் தோழர்கள் பேரில் பழிபோட்டு—நாலைந்து நாட்கள் பரபரப்பாக சென்னை தியாகராயநகர் கடைத்தெருவில் அரசியல் நடத்திய காங்கிரசுக் காலிகளின் அரசியல் தந்திரத்தை, அண்மையில் நாம் அறிந்ததே ஆகும்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தரம் காணீர்- பண்பு பாரீர்!

"சென்னை சபையர் தியேட்டரில் நடந்த அழகிகள் போட்டியில் மந்திரி மதியழகன் கலந்து கொண்டாராம் !

"3 அழகிகளுக்கு நடுவில் மதியழகன் நிற்கின்ற படம் ஒன்று திருடன் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது !

"படத்தைப் பார்க்கும்போது, புது வீட்டுக்குப் பூசணிக்காய் கட்டியது மாதிரி இல்லையா?"

'பூசணி' என்ற ஒரு வார்த்தைத் தலைப்பில், 19—2—68 'நவசக்தி' இதழில் வெளிவந்த 'பாக்ஸ்'செய்தி இது!

தமிழ் தெரிந்தவர்களின்—பத்திரிகை படிப்பவர்களின்—அரசியல் தெரிந்தவர்களின் சிந்தனைக்கு எடுத்துத் தந்துள்ளோம், அப்படியே !

வடாற்காடு மாவட்டத்தில் கிடைத்த சங்க காலத்து நாணயங்கள்

சட்டமன்றத்தில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, பிப். 19—

"சங்ககாலத்து நாணங்கள் வட ஆற்காடு மாவட்டம் ஆண்டிப்பட்டியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்டது உண்மையா? 'ஆம்' எனில், எத்தனை? பண்டை வரலாற்றினைத் தொகுப்பதில் அவை எவ்வாறு உதவும்?"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் பெ. மலைச்சாமி கேட்டார்.

விடையளித்த கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் விளக்கியதாவது:—

"ஆண்டிப்பட்டியில் 143 நய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன; அவை வரலாற்று முறையிலும், எழுத்தியல் வகையிலும் சுவையான தகவல்களைத் தருகின்றன; அந்த நாணயங்களின் மேல் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன; அவை, சென்னை அரும் பொருட்காட்சி சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

"அவை சங்ககாலத்து நாணயங்களா அல்லவா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை; அதுபற்றி அரும் பொருட்காட்சி சாலையினரால் ஆராயப்பட்டு வருகிறது.

"நாணயத்தின் ஒருபுறம் கடல் அலைபோலும், மலையைக் குறிக்கும் முக்கோண வடிவமும் காணப்படுவதுடன், 'சேந்தன்' என்ற பெயரும் உள்ளது; அந்தச் சேந்தன், சங்ககாலத்தைச் சேர்ந்தவரா, இல்லையா என்றும் தெரியவில்லை.

"இதுபற்றி அரும்பொருட்காட்சிசாலையினர் ஒரு சிறு அறிக்கையும் வெளியிட்டுள்ளனர்."

மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறக்க நிதி

மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிக்கை

சென்னை, பிப் 19—

கோவையில் இன்னமும் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கக் கூடுதலான பணவுதவியளிக்குமாறு மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டுக்கொண்டிருப்பதாகவும், இது குறித்து பெங்களூரில் மத்திய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதுவரையில் 18 ஆலைகளுக்கு ரூ. 1,13,00 000 கடன்—முன்பண உறுதிப்பாடு வழங்கி ஆலையைத் திறக்க மாநில அரசு உதவியுள்ளதாகவும், சட்டமன்றக் கேள்வி நேரத்தின்போது தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

கோ. பன்னீர்செல்வம்
பி.எஸ்ஸி.

அண்மையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்கத் தேர்தலில் திரு. கோ. பன்னீர்செல்வம் பெருவாரியான வாக்குகள் பெற்றுப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

'நெசவாளி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியராக உள்ள இவர், கௌரவ பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டாகவும், முதலமைச்சரைத் தலைவராகக்கொண்ட மாநில ஹாஜ் குழுவில் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

பல்வேறு நோக்கும் போக்கும் உடைய எழுத்தாளர்களிடையே அடிப்படை ஒற்றுமையைக் காண வேண்டுமென்பதோடு, சங்கத்திற்கென சொந்தக் கட்டிடம் அமைப்பதும், ஏழ்மையில் வாடும் எழுத்தாளர்களுக்கு உதவி புரிய எழுத்தாளர்கள உதவி நிதி ஒன்று திரட்டுதலும் தமது குறிக்கோளாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழகம்

மாவட்டச் செயலாளர் அறிவிப்பு

5—2—68-ல் நடைபெற்ற சென்னை 40-வது வட்ட (சூளை) தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் நடைபெற்ற தகராறு குறித்து பகுதிச் செயலாளர் டபிள்யூ. பி. பி. சுந்தரம் கொடுத்த புகாரின் பேரில், 13—2—68-ல், 'அன்பக'த்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் 40-வது வட்டச் செயற்குழுவினரின் விசாரணைக் கூட்டம் நடை பெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட இருபது பேர்களின் வாக்குமூலமும் கேட்கப்பட்டு, பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். மற்றும் சில சாட்சிக்குரிய பொருட்களும் பார்வையிடப்பட்டு, குற்றச்சாட்டுகள் உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

குற்றச்சாட்டின்படி கழகத்தின் கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் ஊறு தேடும் வகையில் நடந்துகொண்ட 40-வது வட்டக் கிளையைச் சேர்ந்த தோழர்கள் உ. பாலு, என். கே சாமி, சி. மதிவாணன், இரா. செயராமன், ப செல்வராசு ஆகிய ஐவர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு, அவர்களை ஐந்து ஆண்டுகள் கழகத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று மாவட்டக் கழகம் முடிவு செய்து, இதற்குரிய அனுமதியை வழங்குமாறு கழக அமைப்புச் செயலாளருக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

"தலைமையின் அனுமதி கிடைக்கும் வரையில், மேற்படி ஐந்து தோழர்களும் தற்காலிகமாகக் கழகத்திலிருந்து 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ளனர் என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவித்துக்கொள்ளுகின்றேன்.

"தலைமைக் கழகத்தின் ஒப்புதல் வரும்வரையில், 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள மேற்படி ஐந்து தோழர்களும், கழகத்தின் எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது"

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நோகாமல் அடிப்பதும் ஓயாமல் அழுவதும் தெருக்கூத்துக்களில், 'கட்டியக்காரன்' வேடம் அணிபவர்களுக்கு மட்டுமே சொந்தம்—என்று யாரும் கருதிவிடாதீர்கள் ! அது, இன்றுள்ள காங்கிரசுக் காலிகளுக்கும் பிறவி உரிமையாகப் போய்விட்டிருப்பதாகும் !

அத்தகு உரிமைகளுக்காக அவர்கள் மூலைக்குமூலை தெம்மாங்கு பாடி 'திக்விஜயம்' கிளம்பவிருப்பதை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

> **பிறரைத் துன்புறுத்தவும், அடக்கி ஆளவும் தங்களுக்கு மட்டுமே உரிமை வேண்டும் என்று அவர்கள் இந்த மாதம் 25-ந் தேதி 'போராட'க் கிளம்புகிறார்கள் !**
>
> **வியட்காங் கொரில்லாக்களை வாழ்த்தித் தொழுதுவிட்டு, சனநாயகத்தைக் காப்பதற்குப் புறப்படும் போலிகளையும், 'பபூன்'களையும் என்னென்பது? 'வியட்காங்குகளையும் புரிந்துகொள்ளாமல் — சனநாயகத்தையும் தெரிந்துகொள்ளாமல் வெளிக்கிளம்பும் 'அரைகுறை'கள். தமிழக மக்களுக்குச் சரியான நகைச்சுவை விருந்தளிக்கப் போகிறார்கள் !**
>
> **இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகச் சூடேறிக் கொந்தளிக்கும் தமிழகத்தில், பிப்ரவரி 25-ல் வாய்விட்டுச் சிரிக்க ஓர் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது !**

பார்க்கப்போனால், சில நாட்கள், இவ்வகை சக்திகளுக்கு மட்டுமே சரிபாகவும் குறிப்பாகவும் அமைந்துவிடுகின்றன !

'பிப்ரவரி 25' என்பது, நாஜிகளுக்கு நினைவிற்நீங்காத நாளாகும். 1920 பிப்ரவரி 24-ல்தான், இட்லர் முதன்முதலாக இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய ஓர் இடத்தில், தனது கன்னிப் பேச்சைத் துவக்கினன்; அது, இட்லருக்கு இரண்டாவது பொதுக்கூட்டம். அதற்கு முன்பு ஒரு கூட்டத்தில் உளறிவழிந்தான் என்றாலும், 'அதைக் கேட்ட மக்கள் 111 பேர்' என்று சரியாகச் சரித்திரம் சொல்லுகிறது !

பிப்ரவரி 24-ந் தேதியன்று பேசிய கூட்டத்தில் இட்லர் உதிர்த்த முத்துக்கள், மறுநாள் பிப்ரவரி 25-ம் நாளன்று, ஜெர்மானிய சனநாயகத்தில் கடுமையான நஞ்சினை காற்றோடு கலந்து அனுப்பிற்று ! முதன்முதலாக, தங்களை நாஜிச சைத்தான் உலுக்கி ஒடுக்கவிருப்பதை 1920 பிப்ரவரி 25-ல்தான் ஜெர்மானியர் அறிந்தனர் !

அதேபோல், 1925 பிப்ரவரி 25 அன்று (சிறையிலிருந்து பரோலில் வெளிவந்திருந்த நேரத்தில்) தமது உதவாக்கரை நண்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசனை செய்து, பிப்ரவரி 26-ல் வெளிவரும் வகையில் இட்லர் நீண்டதோர் கட்டுரை (தலையங்கம்) எழுதினன். அதற்குப் பெயர், 'புதுமைத் தொடக்கம்' என்று பெயரிட்டான்; அதில், 'தன் கையில் குவிந்திருக்கும் சக்தியைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஓர் அரசியல் கட்சித் தலைவன், அவ்வளவாகச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை' என்று குறிப்பிட்டிருந்தான்.

தற்போது காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களிடம் குவிந்துள்ள சக்தி எது என்பது நமக்குத் தெரியும் ! ஆக்கபூர்வமான எந்தச் சக்திகளுக்கும் பிறவிப் பகையாகப் போய்விட்ட அழிவுச் சக்திகளே அவரிடம் எஞ்சியிருக்கின்றன !

அதற்கடுத்த பிப்ரவரி 27-ல், இட்லர், மீண்டும் உளறினன்; அந்த உளறலில் அவன் குறிப்பிட்ட வாசகங்களும், இந்த பிப்ரவரி 25-ல் போராட்டக் கூட்டங்கள் நடத்தவிருப்பதாகச் சொல்லும் காங்கிரசு நாளிதழ் ஒன்றில் காணப்படும் வாசகங்களும் ஒரேமாதிரியாக—வெகு பொருத்தமாக அமைந்திருப்பது நமக்கு வியப்பளிக்கவில்லை —வேதனையைத்தான் தருகிறது !

> **"நம்முடைய (நாஜிகளுடைய) இந்தப் போராட்டத்தில் இருவித வாய்ப்புக்கள் மட்டுமே இருக்கின்றன; ஒன்று—நம்முடைய பிணத்தின்மேல் அவர்கள் (சனநாயகவாதிகள்—மார்க்சிஸ்டுகள்—யூதர்கள்) பயணஞ்செய்ய வேண்டும்; அல்லது அவர்களுடைய பிணங்களின்மேல் நாம் நடக்கவேண்டும்"**

—இது, இட்லர், 40 ஆண்டுகளுக்கு முன் ஒரு பிப்ரவரித் திங்கள் இறுதி வாரத்தில் உளறிக் கொட்டியவை !

எந்த நிலையிலும் மயக்கத்திற்கு இடம் அளிக்காத அந்த இட்லரின் பாணியிலேயே—எப்போதும் மயங்கிக்கிடக்கும் ஒருவர்—காங்கிரசு நாளேடு ஒன்றில், பிப். 25 பற்றி போர்ப் பாட்டு பாடுவதைக் கேளுங்கள் :—

"எழுந்து போராடுவோம்"—(அதாவது 'படுத்துக் கொண்டே ஜெப்போம்' என்பதெல்லாம் பகற்கனவாகப் போய்விட்டது; இப்போது, எழுந்து நின்று போராடப்போகிறார்கள் !)

"நம் குருதியிலே விழுந்து நீராடுவோம்"—(அதாவது எப்போதோ—யாரோ ஒரு படாதிபதி

(4-ம் பக்கம் பார்க்க)

வலியா ?

ஜலதோஷமா ?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தலைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள் !

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.
AM/3768

காங்கிரசு ஆட்சியின் சனநாயகப் படுகொலை!

மேற்கு வங்கமும் பலியாயிற்று

சட்டமன்றம் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம்

புதுடில்லி, பிப். 20—

மேற்கு வங்க மாநில ஆட்சியும் இன்றுமுதல் குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் வந்தது. (ஏற்கனவே அரியாணு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் இருந்துவருவது நினைவுகூரத்தக்கது)

இந்தியா விடுதலையடைந்த பிறகு மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

'மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தவேண்டும்' என்று மத்திய அமைச்சரவை நேற்று முடிவு செய்தது.

இன்று காலை மேற்கு வங்க முதலமைச்சர் கோஷ், ஆளுநரிடம் தமது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தவுடன், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், பிரகடனத்தில் கையெழுத்திட்டார்.

குடியரசுத் தலைவர், மேற்கு வங்கச் சட்டமன்றத்தைக் கலைக்கவும் ஆணை பிறப்பித்தார்; எனவே, இனிப் புதிதாகத் தேர்தல் நடத்தித்தான் சட்டமன்றம் அமைய வேண்டும்.

குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தியதை, நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்.

குடியரசுத் தலைவரின் ஆட்சி ஆறு திங்கள் முதல் மூன்றுண்டுக் காலம்வரை நீடிக்கப்படலாம்.

குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தியதன் விளைவாக டாக்டர் பி. சி. கோஷ் அமைச்சரவை அற்பாயுளில் முடிந்தது. இந்த அமைச்சரவை கடந்த நவம்பர் 21-ம்நாள்தான் பதவியேற்றது.

அஜாய் முகர்ஜியை முதலமைச்சராகக் கொண்ட கூட்டணி அமைச்சரவை நீக்கப்பட்டதையடுத்து, காங்கிரசுக் கட்சியின் துணை கொண்டு பி. சி. கோஷ் ஆட்சியில் அமர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடத்திவிடவேண்டும் என்றே மத்திய அரசு தற்போது எண்ணம் கொண்டுள்ளதாம்.

இதுவரையில், எந்தெந்த மாநிலங்களில் எவ்வெப்போது குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது என்ற விவரம் வருமாறு:—

பஞ்சாப்	1951 சூன்
பெப்சு	1953 மார்ச்
ஆந்திரம்	1954 நவம்பர்
திருவாங்கூர்-கொச்சி	1954 மார்ச்
கேரளம்	1959 சூலை
ஒரிசா	1961 பிப்ரவரி
கேரளம்	1964 செப்டம்பர்
பஞ்சாப்	1966 சூலை
இராஜஸ்தான்	1967 மார்ச்
அரியாணு	1967 நவம்பர்

18 ஆண்டில் 11-வது முறை

இந்தியாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம்!

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின் (1950 சனவரி 26-க்குப் பிறகு) இதுவரை 11 தடவை (மேற்கு வங்கத்தையும் சேர்த்து) குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது,

இதற்குமுன், ஒரே நேரத்தில் இரண்டு மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறையில் இருந்ததில்லை; இப்போதுதான் அப்படி ஏற்பட்டிருக்கிறது. (அரியாணுவிலும், மேற்கு வங்கத்திலும்.)

கேரளம் தவிர, வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை குடியரசுத் தலைவர் ஆட்சி ஓராண்டுக்கு மேல் நீடித்ததில்லை. கேரளத்தில் மட்டும் மொத்தம் மூன்று முறைகள் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது; ஆனாலும் ஒரே தடவைதான் ஓராண்டுக்கு மேல் நீடித்தது. மேற்கு வங்கத்திலும் இவ்வாண்டு முடிவுக்குள் மறுதேர்தல்

உடுமலை வட்டத்தில் சி. டி. தண்டபாணி

எம்.பி. சுற்றுப்பயணம்

23—2—68 காலை 10 மணி: பூதனம்; 11 மணி: அம்மாபட்டி; நண்பகல் 12 மணி: சந்தணகருப்பனூர்; மாலை 5 மணி: ஆண்டிய கவுண்டனூர்; 6-30 மணி: உரலுப்பட்டி; இரவு 7-30 மணி: கொழுமம்; 8-30 மணி: சின்னகுமார பாளையம்; 9-30 மணி: அமராவதி நகர்.

24—2—68 காலை 10 மணி: வாளவாடி; 11 மணி: கணபதி பாளையம்; நண்பகல் 12 மணி: புக்குளம்: பிற்பகல் 2 மணி: கோட்டமங்கலம்; 3 மணி: அம்மாபட்டி (ஆமந்தகடவு); மாலை 5 மணி: சல்லவநாய்க்கன்பட்டி; 6-30 மணி: சுகர் மில்ஸ்; இரவு 8 மணி: கண்ணமநாய்க்கனூர்.

[தோழர்கள் ஏ. எஸ். மணி, மா. சேரன், தி. விசுவநாதன், க. பருவதகண்ணன் ஆகியோரும் உடன் வருவர்.]

சட்டமன்றத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் உள்ள பரந்த அக்கறை உணர்வினை, இனியேனும் 'கவிழ்ப்பாளர்கள்' சிந்தித்துப் பார்க்கட்டும்!

தீய வழிகளில் பெறுவதல்ல தியாகம்! 'கழகத்தினுல் காங்கிரசுக்காரர்கள் அடக்குமுறைக்கு ஆளாகிருர்கள்' என்று குறுக்கு வழியில், 'அரசியல் தியாக'த்தைக் சம்பாதிக்கப் பார்க்கும் காங்கிரசுக்காரர்களுக்கு,

"எந்தத் தி. மு. கழக உறுப்பினராவது கலவரங்களில் பங்கு கோண்டார் என்பது நிரூபிக்கப்பட்டால், அவரைக் கழகத்திலிருந்து நீக்கத் தயாராக இருக்கிறேன்"

என்று அண்ணு அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தபோது, காங்கிரசுத் தரப்பில் காணப்பட்ட அமைதி நிலை, வெளியே அவர்களால் நடத்தப்படும் கட்டுப்பாடான பிரச்சாரம் 'ஓர் அபாண்டப் போக்கு'—என்பதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதாக இருக்கிறது!

அரசியல் மாச்சரியம் காரணமாகக் கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சில சிரமங்களை எடுக்கும் நிலைக்குக்கூடக் காங்கிரசாரை ஆளாக்க அண்ணு அவர்களின் மென்மைப் போக்கு, இடமளிக்க விரும்பவில்லை.

"கழக நிர்வாகத்தினை மககள் விரும்புகிருர்களா இல்லையா என்பதனை அறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தவும் நான் தயாராக இருக்கிறேன்"

என்ற அவரது உரையின் கடைசிப் பகுதியில், 'நேர்மை—மென்மை ஆகிய இரண்டும் இல்லை' என்று எந்தக் காங்கிரசுககாரராவது, இதயத்தில் கை வைத்துச் சொல்லமுடியுமா?

கவர்னர் உரையில் காணப்படும் திருக்குறளுக்குப் பாராட்டினையும் மகிழ்ச்சியையும் தரவேண்டிய எதிர்க் கட்சித் தலைவர், மிக எளிதாக அதில் உள்ள இரண்டு சொற்களை மட்டும் எடுத்தாண்டு விமர்சனத்தை முடித்திருக்கிருர்.

'பகை'—'பசி' பற்றிய கருத்திருமனின் பேச்சுக்கு, அடுத்த சில நிமிடங்களிலேயே அண்ணு அவர்கள், தோழமை உள்ளத்துடன், அரசியல் விளக்கம் தந்திருக்கிருர்.

கருத்திருமனைப்போலவே, திருக்குறளில் காணப்படும் இரண்டு சொற்களைக் கொண்டே நாமும் விமர்சிப்பதென்ருல், தமிழகத்துக் காங்கிரசுக் காரர்களின் 'அதிகாரப் பசி—அரசியல் பகை' இரண்டும் மறைந்து, 'இந்த மாநிலத்தின் நல்வாழ்வு' என்ற பொது நிலை வரும்போது, இனியாவது அவர்கள், அண்ணுவின் தோழமைக் கரங்களை மேலும் வலிவுபடுத்த முயலட்டும்!

இதற்கு அடையாளமாக—அண்ணு அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதுபோல்—முதலில், தமிழ்நாடு காங்கிரசு கூடி, 'புதுடில்லியின் மொழித் திட்டத்தைத் திரும்பப் பெறுமாறு தாக்கீது அனுப்பட்டும்' என எதிர்பார்ப்போமாக!

நேற்றுடன் முடிந்துள்ள சட்டமன்றக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றியுள்ள அன்புரை—அறிவுரை—அரசியல் விளகக உரை இதற்கு வழிவகுக்குமென்ருல், தமிழகம் பெறும் பேறு, அதைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது!

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

22--2--68

வலையப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு அழகிரி திடலில் (மாரியம்மன் கோயில் அருகில்); தலைவர்: வீ. பழனியப்பன்; பேசுவோர்: சிற்றுளி சுப்பிரமணியம், இரா. வையாபுரி, க. பொன்னுசாமி, வீ. கிருஷ்ணமூர்த்தி, பி.பி. சாமி, பெ. மாரப்பன், மா. பொன்னம்பலம், மருதமுத்து, மற்றும் பலர். (மதுரை கண்ணம்மாள்—தங்கராசு குழுவினரின் 'பூத்தது பொற்காலம்' என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

வெண்மணியாத்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: கோதண்டபாணி; பேசுவோர்: வெ. கண்ணன், ஆ. தங்கவேலு, வெ. முனுசாமி எம்.எல்.ஏ., எஸ். நடராசன், எஸ். பக்கிரி, தி. க. கோட்டையன், மு. திராவிடமணி, ஜி. ஏழுமலை, மா. குப்புசாமி, மற்றும் பலர்.

கரூர்

25, 26-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பசுபதி பாளையம் பெரியார் திடலில்; தலைவர்: பி. சுந்தரம்; பேசுவோர்: கா. காளிமுத்து பி.ஏ., என். ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம்.

23--2--68

சென்னை 25-வது வட்டம்

எம் ஜி.ஆர். மன்றச் சார்பில் இந்தி ஒழிப்பு வெற்றிவிழா; மாலை 7 மணிக்கு சிவஞானம் பூங்கா அருகில்; தலைவர்: சி. அ. இரத்தினம்; பேசுவோர்: துரை முருகன் பி.ஏ., இரா. சனுர்த்தனம் எம்.ஏ., ஜீவா கலைமணி பி.ஏ., என். வி. என். செல்வம், வ. பா. இளங்கோவன் பி.எஸ்சி., அ. ஆண்டியப்பன், எம். எஸ். புகாரி, பா. சார்லஸ், ச. மகாலிங்கம்.

குன்னூருக்கு என்.வி.என். வருகை

நகராட்சி மன்றம் வரவேற்கும்

குன்னூருக்கு 24—2—68 அன்று வருகை தரவிருக்கும் கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கட்கு, காலை 11 மணியளவில், குன்னூர் நகராட்சி மன்றம் வரவேற்பு அளிக்கும்.

குழுக் கூட்டம்

சீர்காழி வட்ட தி.மு க. கூட்டம் 23—2—68 பிற்பகல் 3 மணிக்கு சீர்காழி பயணிகள் விடுதியில் தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்; வட்டப் பிரதிநிதிகள் தவருது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் டி. வி. சம்பத் கேட்டுக்கொள்கிருர்.

நில அளவை முறையில் மாற்றம்

தள்ளி வைக்கத் தமிழக அரசு கோரிக்கை

"நமது மாநிலத்தின் நில அளவை முறையை மெட்ரிக் முறையில் மாற்றியமைக்கும் ஏற்பாட்டை ஒரு பத்தாண்டுக் காலத்துக்குத் தள்ளி வைக்குமாறு மத்திய அரசுக்குத் தமிழக அரசு எழுதியிருக்கிறது"

என, வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"ஏக்கர், லிங்க்ஸ் முறையில் நடைமுறையில் இருந்து வரும் நிலஅளவை முறையை மெட்ரிக் அடிப்படையில் மாற்றியமைக்குமாறு மத்திய அரசு இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளது.

"பல ஆண்டுக் காலமாகப் பழகிப்போன இந்த முறையை மாற்றியமைப்பதனுல் ஏற்படும் சங்கடங்களை உணர்ந்து, அதற்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்யச் சில ஆண்டுகள் தேவைப்படும் என்று மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்."

புத்தொளி பெற்ற சிற்றூர்கள்

தமிழகத்தில் சென்ற டிசம்பர் மாதம் மின்சார வசதி பெற்ற நகரங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 239-ம், மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 4,434-ம் ஆகும்.

சனவரி முதல் தேதியன்று மாநிலத்தில் மின் வசதி பெற்றிருந்த ஊர்கள் 27,672; மின் இணைப்புப் பெற்றிருந்த பம்பு செட்டுகள் 3,26,153.

நாஜிகளை நினைவுபடுத்தும்...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அட்வான்சு கொடுத்து, ஏதோ ஒரு படத்திற்கு அர்த்தமில்லாமல் எழுதிய பாட்டொன்றின் அடியை இங்கு 'சாங்கோபாங்கமாக'ப் பயன் படுத்துகிருர் என்று பொருள்!)

"நாகரிகத்துக்கும் காட்டுமிராண்டிகளுக்கும் நடக்கும் கடைசிக் களம் இதுவே என முடிவு கட்டுவோம்"—(அதாவது, 'உண்மையாகப் போராடப் புறப்பட்ட உண்மை வீரன் எவனும் களத்தின் எண்ணிக்கையை முடிவு கட்டிக்கொண்டு வர மாட்டான்' என்கிறீர்களா? அவர்களுக்கு இருக்கும் படைபலம், 'ஒரு களத்திற்கு மட்டுமே தாக்குப் பிடிக்கக்கூடியது' என்பது பொருள்; அதோடு, 'நாகரிகமும் காட்டுமிராண்டித்தனமும் களத்தில் பொருதுவதல்ல; காலத்தால் மாற்றப் படுபவை' என்பதும் அதை எழுதியவருக்குத் தெரியுமா தெரியாதா என்பதை யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம்; ஏனென்ருல், பைபிளைத் தமிழில் சுவிசேஷங்களாக மொழி பெயர்த்தவர்கள் இப்படி எழுதி வைத்திருக்கிருர்கள். அதுமட்டுமல்ல: அந்தக் கட்டுரை முழுவதையும் குடல் புரட்டிக்கொண்டு வராமல் படிக்கும் பொறுமை படைத்தவர்கள், காட்டுமிராண்டித்தனமான வசவுகளின் வீச்சில் மூச்சுத் திணறிப் போவதும கண்கூடு.)

பாவம்! மனிதனின் 'வறுமை' எத்தகு ஈனத்தனமான செயல்களுக்குத் தூண்டும் என்பதை அவர் தசையும் உடலுமாக நமக்கு வெளிக்காட்டிக் கொண்டிருக்கிருர்!

'எதிரியை எதிர்ப்பவன் வீரன்' என்பதில் ஐயமில்லை; ஆனல், தன் நிழலையே தான் எதிர்க்கப் போவதாக நாஜிகளுக்குப் பிடித்தமான நாளொன்றைக் குறிப்பிட்டுக் கொண்டு உளறி வழிபவர்களைப் பற்றி என்ன சொல்வது?

"ஏ, காலமே! மனமே! பொறுமையே! சனநாயகமே! காந்தியடிகளே! அறமே! தமிழகமே!" என்று ஆர்தர் கோயஸ்ட்லர் பாணியில் துதிப்பது தவிர, நாம் இப்போது அவசரப்படுவதற்கு ஒன்றுமில்லை!

நாஜிகளுக்கு எதிரிகளாக விளங்கிய சக்திகள் எவை என்பதை நாம் அறிவோம்! அவைகளாகவே நாம் இருப்பதாக மற்றவர் சொல்லுவதையும் பெருமையுடன் ஏற்றுக்கொள்வோம்!

பிப்ரவரி 25-ல் கிளம்பிப் படியும் புழுதியை, மார்ச் 6-ல் நாம் அலம்பித் தூய்மையாக்குவோம்!

—தோழன்

வருந்துகிறோம்

காஞ்சிபுரம், பிப். 21—

இயக்கத்தின் நீண்டநாள் தோழரும் காஞ்சியில் இயக்கக் காவலராக இருந்தவரும், தமது மக்கள் அனைவரையும் இயக்கத் தொண்டில் ஈடுபடச் செய்து மகிழ்ந்தவருமான காஞ்சிப் பெரியவர் திரு. சின்னசாமி (நாய்க்கர்) அவர்கள், நேற்று காலை தமது 76-வது வயதில் இயற்கையெய்தினர் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

அவர்தம் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். —ஆ-ர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.